**செய்தி வெளியீடு எண்: 445** **நாள்: 01.03.2024**

**தமிழ்நாடு வணிகர் நல வாரியம் சார்பில் திருவாரூரைச் சேர்ந்த திருமதி சாந்தி தேவி மற்றும் குளித்தலையை சேர்ந்த திரு.சிவக்குமார் ஆகியோருக்கு குடும்ப நல நிதி உதவியாக தலா ரூபாய் மூன்று லட்சம் (₹ 3,00,000/-) காசோலையை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்கள் வழங்கினார்கள்.**

இன்று (01.03.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாநிலத்தின் வரிவருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் பங்களிக்கும் முக்கிய துறையாக விளங்கும் வணிக வரித்துறை 2023-24ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை ரூ. 1,16,824 கோடி மொத்த வரி வருவாய் ஈட்டியுள்ளது. 2023-24 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் மட்டும் வணிகவரித்துறையில் வரி வருவாய் பத்தாயிரம் கோடியைத் தாண்டி ரூ.11,383 கோடி மொத்த வரி வருவாய் ஈட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டத்தின்போது, தமிழ்நாடு வணிகர் நல வாரியம் சார்பில் திருவாரூரைச் சேர்ந்த திருமதி சாந்தி தேவி மற்றும் குளித்தலையைச் சேர்ந்த திரு.சிவக்குமார் ஆகியோருக்கு குடும்ப நல நிதி உதவியாக தலா ரூபாய் மூன்று லட்சம் (₹ 3,00,000/-) காசோலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

அனைத்து கோட்டங்களில் பணிபுரியும் இணை ஆணையர்களும்(மா.வ) கூடுதல் கவனம் செலுத்தி தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை செவ்வனே மேற்கொண்டு அரசின் வருவாய் இலக்கை அடைவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசுச் செயலாளர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப., இணை ஆணையர் நிர்வாகம் திரு.பொ.இரத்தினசாமி இ.ஆ.ப., மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in